# காலிங்கராயன் சிலை, தபால் தலை வெளியிட நடவடிக்கை

## அமைச்சர் உறுதி



சென்னிமலை,ஜன.20-

விவசாயமேம்பாட்டிற்கு வித்திட்டகாலிங்கராயனிற்கு ஈரோட்டில்சிலைஅமைக்கவும், நினைவு தபால் தலை வெளியிடவும்நடவடிக்கை எடுக்கப்படும் என வெள்ளோட்டில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் ராஜா தெரிவித்தார்.

வெள்ளோட்டில்காலிங்கராயன் சிலை திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு சென்னிமலை யூனியன் சேர்மன்சின்னுசாமிகவுண்டர் தலைமைவகித்தார். இராசாசுவாமி நற்பணி மன்ற தலைவர் கண்ணுசாமி வரவேற்றார். மாவட்ட கவுன்சிலர் செங்கோட்டையன், கல்வெட்டுஆராய்ச்சியாளர் ராசு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கைத்தறிதுறைஅமைச்சர் ராஜா,காலிங்கராயன்சிலையை திறந்துவைத்து பேசினார். அப்போதுஅவர்கூறியதாவது:

காலிங்கராயன், தீரன் சின்னமலை ஆகியோர் கொங்கு மண்ணில் பிறந்து பெருமைசேர்த்தனர். காலிங்கராயன்தனதுசொந்தபொறுப்பில்பவானிமற்றும்நொய்யல் நதிகளைஇணைக்கும்வகையில்கால்வாய்வெட்டினார். இதனால்லட்சக்கணக்கான விவசாயிகள் பயன்பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் காலிங்கராயனுக்குஈரோட்டில்சிலை அமைக்கவும்,தபால்தலை வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறுஅவர்பேசினார்.

விழாவில்பழனிஎம்.பி. கார்வேந்தன், காங்கயம் எம்.எல்.ஏ.விடியல் சேகர், மொடக்குறிச்சிஎம்.எல்.ஏ. பழனிசாமி, சென்னிமலை யூனியன்சேர்மன்சின்னுசாமி கவுண்டர், காலிங்கராயன் வாரிசுகள்சித்தார்த், செந்தில்ராஜ், சுகுமார், ஊராட்சி தலைவர்சந்திரகலாஉட்பட பலர்பங்கேற்று பேசினர்.

விழாவில்மாவட்டத்தின் முக்கியபிரமுகர்கள்உட்பட பலர்பங்கேற்றனர்.